**THIRUVEL ACADEMY**
**TNPSC Gr-2, 2A PRELIMS & MAINS – 2022**
**TIRUVANNAMALAI**
**97901 46151 / 88707 60558 / 86673 31004**

**MODEL TEST - 5**

*{10-வது தமிழ், டிசம்பர் - 2021 மாத நடப்பு நிகழ்வு, Unit – 6 இந்திய பொருளாதாரம் ( 6 - 12), பரப்பு & கன அளவு, நேரம் & வேலை }*

1. கூற்று அ: "உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே "
கூற்று ஆ: "மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே" என்றவர். க.அப்பாதுரையார்.
A)கூற்று அ சரி, ஆ தவறு
B)கூற்று ஆ சரி, அ தவறு
C)கூற்று அ மற்றும் ஆ இரண்டும் சரி
D)கூற்று அ மற்றும் ஆ இரண்டும் தவறு
E)விடை தெரியவில்லை

2. பாவலரேறு படைத்திட்ட இலக்கியங்களுள் பொருத்தமில்லாத ஒன்றைத் தேர்ந்தெடுக்க.
A)பாவியக்கொத்து
B)கனிச்சாறு
C)எண்சுவை
D)வஞ்சி
E)விடை தெரியவில்லை

3. அகரவரிசைப்படுத்துக.
A)கவை, கொம்பு, கொப்பு, கிளை, சினை, போத்து, குச்சு, இணுக்கு
B)கவை, கிளை, குச்சு, கொம்பு, கொப்பு, சினை, போத்து, இணுக்கு
C)இணுக்கு, கவை, கிளை, குச்சு, கொம்பு, கொப்பு, போத்து, சினை
D)இணுக்கு, கவை, கிளை, குச்சு, கொப்பு, கொம்பு, சினை, போத்து
E)விடை தெரியவில்லை

4. பூவின் நிலைகளை சரியாக வரிசைப்படுத்துக.

A)அரும்பு, போது, மலர், வீ, செம்மல்

B)போது, அரும்பு, வீ, மலர், செம்மல்

C)செம்மல், அரும்பு, போது, வீ, மலர்

D)வீ, அரும்பு, செம்மல், போது, வீ.

E)விடை தெரியவில்லை

5. தேவநேயப் பாவாணர் குறித்த கூற்றுக்களை ஆராய்க.

1.மொழிஞாயிறு என்று அழைக்கப்படுபவர்.

2. தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர்.

3.செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்.

4.உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.

தவறல்லாத ஒன்றைத் தேர்வு செய்க.

A)4 மட்டும்

B)3 மட்டும்

C)2 மற்றும் 3 மட்டும்

D)ஏதுமில்லை

E)விடை தெரியவில்லை

6. சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படுபவர்.

A)பாரதியார்

B)தமிழழகனார்

C)பாரதிதாசன்

D)தேசிக விநாயகனார்

E)விடை தெரியவில்லை

7. முதல் தமிழ்க் கணினி _____ என்னும் பெயரில் உருவாக்கி விற்பனைக்குக் கொண்டுவந்தது டி.சி.எம். புரொடக்ட்ஸ் நிறுவனம்.

A)இளங்கோவடிகள்

B)கம்பர்

C)திருவள்ளுவர்

D)தொல்காப்பியன்

E)விடை தெரியவில்லை

8. ‘கலப்பில்லாத பொய்’ – என்பது.

A)சொல் முரண்

B)முரண்படு மெய்ம்மை

C)எதிரிணை இசைவு

D)இயல்பு முரண்

E)விடை தெரியவில்லை

9. ’புதிய உரைநடை’ என்னும் நூலுக்காக சாகித்திய அகாதமி விருது பெற்றவர்.

A)மா.இராமலிங்கம்

B)கந்தர்வன்

C)தோப்பில் முகம்மது மீரான்

D)வெங்கட்ராமன்

E)விடை தெரியவில்லை

10. கூற்று : உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் ’வசனகவிதை’ எனப்படுகிறது.

காரணம் : ஆங்கிலத்தில், ‘Prose Poetry’ என்றழைக்கப்படும் இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

A)கூற்று காரணம் இரண்டும் சரி, மேலும் பொருந்தியுள்ளது.

B)கூற்று சரி காரணம் இரண்டும் சரி. மேலும் பொருந்தவில்லை.

C)கூற்று காரணம் இரண்டும் தவறு.

D)கூற்று தவறு, காரணம் சரி.

E)விடை தெரியவில்லை

11. தவறான இணையைத் தேர்வு செய்க.

A)ஓஒதல் வேண்டும் - செய்யுளிசை அளபெடை

B)உரனசைஇ உள்ளம் - சொல்லிசை அளபெடை

C)கெடுப்பதூஉம் - இன்னிசை அளபெடை

D)எஃஃகிலங்கிய - அளபெடை இல்லை

E)விடை தெரியவில்லை

12. 'நடவாமை' - என்பதன் இலக்கணக் குறிப்பு.

A)தொழிற்பெயர்

B)வினைத்தொகை

C)எதிர்மறைத் தொழிற்பெயர்

D)வினையாலணையும் பெயர்

E)விடை தெரியவில்லை

13. பொருத்துக:

| | |
|---|---|
| 1.பேறு | அ)தொழிற்பெயர் |
| 2.தட்டு | ஆ)முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் |
| 3.தந்தவர் | இ)முதனிலைத் தொழிற்பெயர் |
| 4.கெடுதல் | ஈ)வினையாலணையும் பெயர் |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | அ | இ | ஈ |
| B) | ஆ | இ | அ | ஈ |

C) அ ஆ ஈ இ

D) ஆ இ ஈ அ

E) விடை தெரியவில்லை

14. ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது.

A)வினைப்பெயர்

B)வினையாலணையும் பெயர்

C)வினைத்தொகை

D)தொழிற்பெயர்

E)விடை தெரியவில்லை

15. 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.

A)எந் + தமிழ் + நா

B)எந்த + தமிழ் + நா

C)எம் + தமிழ் + நா

D)எந்தம் + தமிழ் + நா

E)விடை தெரியவில்லை

16. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே.

A)பாடிய; கேட்டவர்

B)பாடல்; பாடிய

C)கேட்டவர்; பாடிய

D)பாடல்; கேட்டவர்

E)விடை தெரியவில்லை

17. ‘கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்’. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.

A)கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கும் அவரை அழைத்து வாருங்கள்.
B)கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.
C)கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருந்த அந்நபரை அழைத்து வாருங்கள்
D)கலையரங்கத்தில் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.
E)விடை தெரியவில்லை

18. சரியான இணையைத் தேர்வுசெய்க.

A)குணக்கு - மேற்கு
B)குடக்கு - கிழக்கு
C)வாடை - வடக்கு
D)தென்றல் - தெற்கு
E)விடை தெரியவில்லை

19. கிரேக்க அறிஞர் 'ஹிப்பாலஸ்' இதனால் பெயர்பெற்றவர்.

A)பருவக்காற்றின் துணையுடன் உலகை வலம் வந்த முதல் கிரேக்க அறிஞர்.
B)பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தியவர்.
C)கரிகால் பெருவளத்தானைப் பாடிய கிரேக்க அறிஞர்.
D)சங்க காலத்தில் தமிழகம் வந்த யவணர்.
E)விடை தெரியவில்லை

20. தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் _____ மற்றும் ______ பாடல்களைத் தாய் மொழியில் எழுதிவைத்துப் பாடுகின்றனர்.

A)திருவெம்பாவை, திருப்பாவை
B)திருப்பாவை, திருக்கோவையார்

C)திருக்கோவை, திருவெம்பாவை

D)திருவருட்பா, திருக்கோவை

E)விடை தெரியவில்லை

21. பாட்டுக்கொரு புலவன் எனப் பாராட்டப்பட்டவர்.

A)கம்பன்

B)ஒட்டக்கூத்தன்

C)பாரதி

D)பாரதிதாசன்

E)விடை தெரியவில்லை

22. பொருத்துக:

| | |
|---|---|
| 1.மூதூர் | அ)வினைத்தொகை |
| 2.உறுதுயர் | ஆ)உரிச்சொல் தொடர் |
| 3.கைதொழுது | இ)பண்புத்தொகை |
| 4.தடக்கை | ஈ)மூன்றாம் வேற்றுமைத் தொகை |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஈ | இ | ஆ |
| B) | ஈ | இ | அ | அ |
| C) | இ | அ | ஈ | ஆ |
| D) | அ | இ | ஆ | ஈ |

E) விடை தெரியவில்லை

23. தவறான இணையைத் தேர்வு செய்க.

A)கோடு - மலை

B)வீ - மலர்

C)நேமி - உலகம்

D)விரிச்சி - நற்சொல்

E)விடை தெரியவில்லை

24. ”வேலோடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலோடு நின்றான் இரவு” குறளில் பயின்று வந்துள்ள அணி.
A)எடுத்துக்காட்டு உவமை அணி
B)உவமை அணி
C)உருவக அணி
D)வேற்றுமை அணி
E)விடை தெரியவில்லை

25. பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல்.
A)குறிஞ்சிப்பாட்டு
B)முல்லைப்பாட்டு
C)நெடுநல்வாடை
D)மதுரைக்காஞ்சி
E)விடை தெரியவில்லை

26. மதுரை சென்றார் – என்பது.
A)வினைத்தொகை
B)பண்புத்தொகை
C)அன்மொழித்தொகை
D)வேற்றுமைத்தொகை
E)விடை தெரியவில்லை

27. பொருத்துக:

1.அன்மொழித்தொகை அ)மலர்க்கை

2.உவமைத்தொகை ஆ)முறுக்கு மீசை வந்தார்

3.உம்மைத்தொகை இ)வீசுதென்றல்

4.வினைத்தொகை ஈ)அண்ணன் தம்பி

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | அ | ஈ | இ |
| B) | ஆ | அ | இ | ஈ |
| C) | ஆ | இ | ஈ | அ |
| D) | இ | ஈ | அ | ஆ |

E) விடை தெரியவில்லை

28. 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

A)கடல்நீர் ஒலித்தல்

B)கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

C)கடல்நீர் ஆவியாகி மேகமாதல்

D)கடல்நீர் கொந்தளித்தல்

E)விடை தெரியவில்லை

29. நறுந்தொகை என்ற சிறப்புப் பெயர்கொண்ட நூல்.

A)வெற்றி வேற்கை

B)விவேகசிந்தாமணி

C)குறுந்தொகை

D)நற்றிணை

E)விடை தெரியவில்லை

30. மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் இதற்கு வழங்கும் வேறுபெயர்.

A)கூத்தராற்றுப்படை
B)நெடுநல்வடை
C)பெரும்பாணாற்றுப்படை
D)முல்லைப்பாட்டு
E)விடை தெரியவில்லை

31. "காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
_________ கெடக்கெடும் நோய்"

A)நாணம்
B)நாமம்
C)தாமம்
D)பாவம்
E)விடை தெரியவில்லை

32. பெப்பர் – என்பது.

A)விண்மீன்
B)இயந்திர மனிதன்
C)துணைக் கோள்
D)விண்வெளி ஓடம்
E)விடை தெரியவில்லை

33. பெருமாள் திருமொழி குறித்த கூற்றில் தவறான ஒன்றைத் தேர்வு செய்க.

A)நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ளது.
B)குலசேகர ஆழ்வார் இயற்றியது.
C)ஐந்தாம் திருமொழியாக உள்ளது.
D)இவரின் காலம் பத்தாம் நூற்றாண்டு.

E)விடை தெரியவில்லை

34. பொருத்துக:

1.விசும்பு அ)யுகம்
2.ஊழி ஆ)சிறப்பு
3.ஊழ் இ)முறை
4.பீடு ஈ)வானம்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | ஆ | இ | அ |
| B) | ஆ | ஈ | இ | அ |
| C) | ஈ | ஆ | அ | இ |
| D) | ஈ | அ | இ | ஆ |

E) விடை தெரியவில்லை

35. சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல்.

A)குறுந்தொகை
B)புறநானூறு
C)கலித்தொகை
D)பரிபாடல்
E)விடை தெரியவில்லை

36. கூற்று 1: ”மாற்றத்திற்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளும் திறனே புத்திக்கூர்மை”
கூற்று 2: “அறியாமை அறிவாற்றலின் மிகப்பெரிய எதிரியல்ல. அது அறிவின் மாயையே”
மேற்கண்ட கூற்றுக்களுடன் தொடர்புடையவர்.

A)ஸ்டீபன் ஹாக்கிங்
B)சார்லஸ் பாப்பேஜ்

C)வின்செண்ட் சர்ச்சில்

D)ஆப்ரகாம் லிங்கன்

E)விடை தெரியவில்லை

37. விண்வெளி இயற்பியலில், கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதலில் குறிப்பிட்டவர்?

A)ஆல்பிரட் நோபல்

B)ஐன்ஸ்டீன்

C)ஹாக்கிங்

D)ஜான் வீலர்

E)விடை தெரியவில்லை

38. சரியான இணையைத் தேர்வு செய்க.

A)என் அம்மை வந்தாள் - பால் வழுவமைதி

B)வாடா இராசா - திணை வழுவமைதி

C)அரசர் நாளை வருகிறார் - இட வழுவமைதி

D)கத்துங் குயிலோசை - மரபு வழுவமைதி

E)விடை தெரியவில்லை

39. Cosmic rays – என்பதன் தமிழாக்கம்.

A)புற ஊதாக் கதிர்கள்

B)விண்வெளிக் கதிர்கள்

C)அகச்சிவப்புக் கதிர்கள்

D)அனைத்தும் சரி

E)விடை தெரியவில்லை

40. " மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்ற குறிப்பு ____ இல் இடம்பெற்றுள்ளது.

A) தொல்காப்பியம்

B) மணிமேகலை

C) சிலப்பதிகாரம்

D) சின்னமனூர்ச் செப்பேடு

E) விடை தெரியவில்லை

41. கூற்று 1 : ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையலித்தல் சதாவதானம்.

கூற்று 2: இக்கலையில் சிறந்து விளங்கியவர் தேவநேயப்பாவாணர்.

கூற்று 1 மற்றும் 2 ஐ ஆய்க.

A) கூற்று 1 சரி

B) கூற்று சரி

C) கூற்று 1 தவறு

D) கூற்று 2 தவறு

E) விடை தெரியவில்லை

42. முனிவு – என்பதன் பொருள்.

A) சினம்

B) மகிழ்ச்சி

C) உறவு

D) வனம்

E) விடை தெரியவில்லை

43. "சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன்" இவ்வரிகளில் இடம்பெற்றுள்ள இருவர் யார்?

A) மோசிகீரனார், இரும்பொறை

B) கபிலர், பாரி

C) ஔவையார், அதியமான்

D) பரணர், செங்கணான்

E) விடை தெரியவில்லை

44. கேள்வியினான் – இலக்கணக்குறிப்பு தருக.

A) வினைத்தொகை

B) உருவகம்

C) உவமைத்தொகை

D) வினையாலணையும் பெயர்

E) விடை தெரியவில்லை

45. தவறான இணையைத் தேர்வு செய்க.

A) அறிவினா - மாணவரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என ஆசிரியர் கேட்டல்.

B) அறியா வினா - ஆசிரியரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று மாணவர் வினவுதல்.

C) கொடை வினா - ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா? என்று கடைக்காரரிடம் வினவுவது.

D) ஏவல் வினா - நீ கடைக்குச் செல்கிறாயா? என்று சொல்லுதல்.

E) விடை தெரியவில்லை

46. நிரல்நிறைப் பொருள்கோள் பயின்றுவந்துள்ள திருக்குறளை தேர்வு செய்க.

A) தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

B) இதனை இதனால் இவண்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

C)தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு
D)அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது
E)விடை தெரியவில்லை

47. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாடியவர்.
A)பாரதியார்
B)பாரதிதாசன்
C)கவிமணி
D)திரு.வி.க.
E)விடை தெரியவில்லை

48. தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி.
A)தேவதுந்துபி
B)பறை
C)தவில்
D)சிங்கி
E)விடை தெரியவில்லை

49. பொருத்துக:

| | |
|---|---|
| 1.சிலம்பு, கிண்கிணி | அ)தலையில் அணிவது |
| 2.அரைநாண் | ஆ)நெற்றியில் அணிவது |
| 3.சுட்டி | இ)காலில் அணிவது |
| 4.சூழி | ஈ)இடையில் அணிவது |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | ஈ | இ |

B) ஆ அ ஈ இ

C) இ ஈ ஆ அ

D) இ ஈ அ ஆ

E) விடை தெரியவில்லை

50. ”சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்” எனும் அடிகளுக்கு உரியவர்.

A)க.சச்சிதானந்தன்

B)தமிழண்ணல்

C)இளம்பெருவழுதி

D)பாவலரேறு பெருஞ்சித்திரனார்

E)விடை தெரியவில்லை

51. ”மைத்ரி திவாஸ்” (நண்பர்கள் தினம்) டிசம்பர் – 06 ஐ இந்தியாவுடன் கொண்டாட முடிவு செய்துள்ள நாடு.

A)பாகிஸ்தான்

B)பங்களாதேஷ்

C)சீனா

D)இலங்கை

E)விடை தெரியவில்லை

52. தமிழ்நாட்டின் 16-வது பறவைகள் சரணாலயமாகத் திகழும் கழுவேலி பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள தமிழக மாவட்டம்.

A)திருச்சி

B)திருநெல்வேலி

C)விருதுநகர்

D)விழுப்புரம்

E)விடை தெரியவில்லை

53. கோவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு அறிவித்திருக்கும் இழப்பீட்டுத் தொகை.

A)ரூ.1,00,000

B)ரூ.50,000

C)ரூ.2,50,000

D)ரூ.5,00,000

E)விடை தெரியவில்லை

54. தேசிய மாணவர் படை – 73 வது ஸ்தாபன் தினம் ____ அன்று கொண்டாடப்பட்டது.

A)நவம்பர் - 28

B)நவம்பர் - 29

C)டிசம்பர் - 28

D)டிசம்பர் - 30

E)விடை தெரியவில்லை

55. பைக்கா புரட்சி குறித்த கூற்றை ஆய்வு செய்க.

1.ஒடிசாவின் பாரம்பரிய நில உரிமையாளராகவும், போர் வீரர்களாகவும் விளங்கினர்.

2.16 ஆம் நூற்றாண்டு முதல் ஒடிசா அரசர்களால் பல்வேறு சமூகக் குழுக்களில் இருந்து படையில் சேர்க்கப்பட்டவர் ஆவர்.

3.வாடகை இல்லாத நிலம் (நிஷ்-கர்-ஜாகிர்ஸ்) மற்றும் பட்டங்களுக்குப் பதிலாக அவர்கள் பாதுகாப்புச் சேவைகளை வழங்கினர்.

4.பைக்கா புரட்சி 1917 ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்து கலகம் செய்தனர்.

*A)1, 2 மட்டும் சரி.*

*B)2, 3 மட்டும் சரி*

*C)3,4 மட்டும் சரி*

*D)1, 2, 3 மட்டும் சரி*

*E)விடை தெரியவில்லை*

*56.* *கூற்று : SRESTHA திட்டம் – பட்டியலிடப்பட்ட சாதி வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்காக ஒரு திட்டத்தினை ஒன்றிய அரசு தொடங்க உள்ளது.*

*காரணம் : இத்திட்டமானது மாணவர்களுக்கு இருப்பிட வசதியுடன் கூடிய கல்வி மற்றும் தொழில் பயிற்சிகளை வழங்கும்.*

*A)கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, மேலும் சரியாக பொருந்தியுள்ளது.*

*B)கூற்று காரணம் இரண்டும் சரி, மேலும் பொருந்தவில்லை*

*C)கூற்று சரி, காரணம் தவறு*

*D)கூற்று தவறு, காரணம் சரி*

*E)விடை தெரியவில்லை*

*57.* *மஹா பரிநிர்வாண திவாஸ் - இவரின் நினைவு நாளில் அனுசரிக்கப்படுகிறது.*

*A)மகாத்மா காந்தி*

*B)அண்ணல் அம்பேத்கர்*

*C)சுபாஸ் சந்திர போஸ்*

*D)புத்தர்*

*E)விடை தெரியவில்லை*

*58.* *கென்-பெட்வா நதி இணைப்புத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.*

*இத்திட்டமானது ______ மற்றும் ______ மாநிலங்களுக்கு இடையில் தண்ணீர்ப்பற்றாக்குறையைப் பூர்த்தி செய்யும் என்று உறுதி கூறுகிறது.*

*A)ஒடிஸா, ஆந்திரா*

B) மஹாராஷ்டிரா, மத்தியபிரதேஷ்

C) மத்தியப் பிரதேஷ், உத்திரப் பிரதேசம்

D) ஒடிஸா, மகாராஷ்டிரம்

E) விடை தெரியவில்லை

59. பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாய் யோஜனா – குறித்த சரியான ஒன்றைத் தேர்வு செய்க.

A) இத்திட்டமானது 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

B) விரைவுப் படுத்தப்பட்ட நீர்ப்பாசனப் பயன் திட்டம்,

C) நீர் நிலை மேம்பாடு மற்றும் 'ஹர்கேத் கோ பானி' போன்ற கூறுகள் 2021 – 26 ஆகிய காலக்கட்டத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளன.

D) அனைத்தும் சரி

E) விடை தெரியவில்லை

60. சமீபத்தில் ________ அவர்களின் 150-வது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட ஓர் உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டத்திற்கு பிரதமர் மோடி தலைமை தாங்கினார்.

A) ஸ்ரீ அரவிந்தர்

B) மகாத்மா காந்தி

C) ராஜாராம் மோகன்ராய்

D) ராணி லட்சுமி பாய்

E) விடை தெரியவில்லை

61. தேசிய மாசுக் கட்டுப்பாட்டுத் தினம் – டிசம்பர் 02 ஆனது.

A) ஹீரோஷிமா நாகசாகி மீது அணுகுண்டு வீசப்பட்டதன் நினைவாக அனுசரிக்கப்படுகிறது.

B) போபால் விஷ வாயு விபத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக அனுசரிக்கப்படுகிறது.

C)அணுக்கசிவால் பாதிக்கப்படும் மக்களின் நினைவாக அனுசரிக்கப்படுகிறது.

D)கார்பன் வெளியீட்டு அளவைக் குறைக்கும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.

E)விடை தெரியவில்லை

62. ஒரு வங்கி என்பது.

A)நிதி நிறுவனம்

B)கூட்டு பங்கு நிறுவனம்

C)தொழில்

D)சேவை நிறுவனம்

E)விடை தெரியவில்லை

63. கூற்று : இந்தியப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

காரணம் : கலப்புப் பொருளாதாரம் என்பது, தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்து சீரிய முறையில் செயல்படுவது.

A)கூற்று சரி, காரணம் சரி, மேலும் பொருந்தியுள்ளது.

B)கூற்று சரி, காரணம் சரி, மேலும் சரியாக பொருந்தவில்லை

C)கூற்று சரி, காரணம் தவறு.

D)கூற்று தவறு, காரணம் தவறு.

E)விடை தெரியவில்லை

64. ”அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும் கொள்கைகளையும் ஆராய்வதே பொது நிதியியல் ஆகும்” என்று வரையறுத்தவர்.

A)ரகுராம் ராஜன்

B)ஆடம் ஸ்மித்

C)வி.கே.ஆர்.வி.ராவ்

D)அமர்த்தியா சென்

E)விடை தெரியவில்லை

65. தற்போது வழக்கத்தில் உள்ள வரி முறையான சரக்கு மற்றும் சேவை வரி பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு.

A)2016

B)2015

C)2017

D)2018

E)விடை தெரியவில்லை

66. கூற்று : இந்திய அரசியலமைப்பு ஷரத்து 280 - இன் படி நிதிக்குழு பகுதி சட்டப்பூர்வ அமைப்பாகும்.

காரணம் : 1951 ஆம் ஆண்டு ஒன்றிய மற்றும் மாநிலங்களுக்கிடையே நிதி உறவை வரையறுப்பதற்கு அமைக்கப்பட்டது.

A)கூற்று சரி, காரணம் சரி, மேலும் பொருந்தியுள்ளது.

B)கூற்று சரி, காரணம் சரி, மேலும் சரியாக பொருந்தவில்லை

C)கூற்று சரி, காரணம் தவறு.

D)கூற்று தவறு, காரணம் தவறு.

E)விடை தெரியவில்லை

67. கூற்று 1 : அலுமினியம் தயாரிக்கப் பயன்படும் முக்கியமான தாது ஆகும்.

கூற்று 2 : ஒடிஷா கிழக்குக் கடற்கரையிலும் , ஆந்திரப்பிரதேசம் ஆகிய இடங்களில் அதிக அளவு பாக்சைட் தாது செறிந்து காணப்படுகிறது.

கூற்று 3. ஒரு வெப்பத்தை தடுக்கும் கனிமம்.

கூற்றுக்களை ஆய்வு செய்க.

A)கூற்றுக்கள் 1 மற்றும் 2 சரி, 3 தவறு

B)கூற்றுக்கள் 2 மட்டும் சரி, 1, 3 தவறு

C)கூற்றுக்கள் 3 மட்டும் சரி 1, 2 தவறு

D)கூற்றுக்கள் 1 மட்டும் சரி, 2, 3 தவறு

E)விடை தெரியவில்லை

68. பொருத்துக:

| | |
|---|---|
| 1.பெக்மடைட் | அ)மைக்கா |
| 2.இம்பெர்லி | ஆ)தங்கம் |
| 3.திக்பாய் | இ)சுத்திகரிக்கப்படாத எண்ணெய் |
| 4.ஹட்டி | ஈ)வைரம் |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஈ | இ | ஆ |
| B) | அ | இ | ஈ | ஆ |
| C) | இ | ஈ | அ | ஆ |
| D) | இ | ஈ | ஆ | அ |

E) விடை தெரியவில்லை

69. இந்திய ரிசர்வ் வங்கியானது டாக்டர்.அம்பேத்கர் இயற்றிய ______ என்ற நூலின் வழிகாட்டுதலின் படிகருத்தாக்கம் பெற்றது.

A)பிரிட்டீஷ் இந்தியாவில் மாகாண நிதிகளின் மதிப்பீடு: மாகாண ஏகாதிபத்தியத்தின் நிதிகள் பரவலாக்கம் பற்றிய ஓர் ஆய்வு.

B)இந்தியாவின் தேசிய பங்கீடு பற்றிய வரலாறு மற்றும் பகுப்பாய்வு ஆய்வறிக்கை.

C)பழங்கால இந்திய வர்த்தகம்

D)ரூபாயின் பிரச்சினைகள் அதன் தோற்றமும் அதன் தீர்வும்.

E)விடை தெரியவில்லை

70. இராமச்சந்திர குஹா அவர்கள் _____ என்பவரை 'பச்சைக் காந்தி' என்று அழைத்து சிறப்பிக்கிறார்.

A)வி.கே.ஆர்.வி.ராவ்

B)ஜே.சி.குமரப்பா

C)அமர்த்தியா சென்

D) மஹலனோபிஸ்

E)விடை தெரியவில்லை

71. பொருத்துக:

1.2005 அ)தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம்

2.1985 - 86 ஆ)தேசிய ஊரக வாழ்வாதார திட்டம்

3.2011 இ)இந்திரா ஆவாஸ் யோஜனா

4.2013 ஈ)பாரத் நிர்மான் யோஜனா

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | இ | ஈ |
| B) | ஈ | இ | ஆ | அ |
| C) | இ | ஈ | அ | ஆ |
| D) | ஈ | இ | ஆ | அ |

E) விடை தெரியவில்லை

72. நவீன பேரியல் பொருளாதாரத்தின் தந்தை

A)ஜே.எம்.கீன்ஸ்

B)ஏ.ஜே.பிரவுண்

C)ஆடம் ஸ்மித்

D)கார்ல் மார்க்ஸ்

E)விடை தெரியவில்லை

73. தவறான இணையைத் தேர்வு செய்க.

A)ஜே.எம்.கீன்ஸ் - பொருளாதாரத்திற்கான முதல் நோபல் பரிசு

B)ஆடம் ஸ்மித் - சந்தைப் பொருளாதாரம்

C)கார்ல் மார்க்ஸ் - திட்டமிட்ட (அ) கட்டளைப் பொருளாதாரம்

D)ஏ.ஜே.பிரவுண் - கூட்டுறவே பொருளாதார அமைப்பு

E)விடை தெரியவில்லை

*74. ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தைக் கழித்த பிறகு கிடைப்பது ____ ஆகும்.*

*A)நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)*

*B)மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)*

*C)நிகர தேசிய உற்பத்தி (NNP at Market Prices)*

*D)காரணி செலவில் நிகர தேசிய உற்பத்தி(NNP at Factor Cost)*

*E)விடை தெரியவில்லை*

*75. 'காட்கில் திட்டம்' – என்பது.*

*A)மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்*

*B)ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம்*

*C)ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம்*

*D)ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம்*

*E)விடை தெரியவில்லை*

*76. திட்டக்குழு என்பதற்கு மாற்றாக நிதி ஆயோக் என்னும் அமைப்பு ______ ஏற்படுத்தப்பட்டது.*

*A)2014 ஆம் ஆண்டு ஜனவரி 1*

*B)2015 ஆம் ஆண்டு ஜனவரி 1*

*C)2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 1*

*D)2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 1*

*E)விடை தெரியவில்லை*

*77. வங்கிக் கடன் என்பது எதைக் குறிக்கிறது?*

*A)கடன் பணம்*

*B)முன் பணம்*

*C)கடன் பணம் மற்றும் முன் பணம்*

*D)கடன் பெறுதல்*

*E)விடை தெரியவில்லை*

*78.* *வரிவிதிப்பின் புனித விதிகளாக ஆடம் ஸ்மித் -ஆல் கூறப்படாதவை.*

*A)சிக்கன விதி*

*B)சமத்துவ விதி*

*C)திறன் மற்றும் நெகிழ்வு விதி*

*D)வறுமை விதி*

*E)விடை தெரியவில்லை*

*79.* *21 செ.மீ. பக்க அளவுள்ள ஒரு சதுரத்தின் பரப்பளவு காண்க.*

*A)441 செ.மீ.*

*B)441 செ. மீ.$^2$*

*C)441 மீ.*

*D)441 மீ.$^2$*

*E)விடை தெரியவில்லை*

*80.* *அடிப்பக்கம் 20 செ.மீ. மற்றும் 14 செ.மீ. அளவுகள் உள்ள ஒரு செங்கோண முக்கோணத்தின் பரப்பளவு காண்க.*

*A)140 சதுர மீட்டர்*

*B)140 சதுர செ.மீ.*

*C)240 சதுர மீ.*

*D)240 சதுர செ.மீ.*

*E)விடை தெரியவில்லை*

*81. ஒரு திரையின் சுற்றளவு 6 மீ. மற்றும் அகலம் 2 மீ எனில் நீளத்தைக் காண்க.*

*A)1 மீ.*

*B)2 மீ.*

*C)3 மீ.*

*D)4 மீ.*

*E)விடை தெரியவில்லை*

*82. விளையாட்டுத் திடல் செங்கோண முக்கோணம் வடிவில் உள்ளது. செங்கோணத்தைத் தாங்கும் பக்கங்கள் 50மீ, 80 மீ. திடலில் சிமெண்ட் பூச சதுர மீட்டருக்கு 10 வீதம் ஆகும். மொத்த செலவைக் காண்க.*

*A)ரூ.5,000*

*B)ரூ.10,000*

*C)ரூ.15,000*

*D)ரூ.20,000*

*E)விடை தெரியவில்லை*

*83. ஒரு பூந்தோட்டம் சாய்சதுரம் வடிவில் உள்ளது. அதன் மூளைவிட்டங்கள் 20 மீ., 30 மீ. எனில் பூந்தோட்டத்தின் பரப்பளவு காண்க.*

*A)300 சதுர மீட்டர்*

*B)300 மீட்டர்*

*C)150 சதுர மீட்டர்*

*D)150 மீட்டர்*

*E)விடை தெரியவில்லை*

84. ஒரு முக்கோண வடிவ வயலின் சுற்றளவு 300 மீ மற்றும் அதன் பக்கங்களின் விகிதம் 11:10:9 எனில் அந்த வயலின் பரப்பளவைக் காண்க.

A)4254 சதுர மீட்டர்

B)4344 சதுர மீட்டர்

C)4244 சதுர மீட்டர்

D)4444 சதுர மீட்டர்

E)விடை தெரியவில்லை

85. ஒரு முக்கோண வடிவ நிலத்தின் பக்கங்கள் முறையே 22 மீ, 120 மீ எனில் வயலின் பரப்பளவைக் காணக்கிட்டு. மேலும் வயலைச் சமப்படுத்த ஒரு சதுர மீட்டருக்கு ரூ.10 செல்வாகும் எனில் வயலைச் சமப்படுத்த ஆகும் மொத்தச் செல்வைக் கணக்கிடுக.

A)ரூ.13200

B)ரூ.1320

C)ரூ.64000

D)ரூ.60000

E)விடை தெரியவில்லை

86. A, B மற்றும் C என்பவர்கள் ஒரு வேலையை முடிக்க முறையே 24, 6, 12 நாட்கள் எடுத்துக் கொள்வர் எனில், அதே வேலையை அவர்கள் அனைவரும் இணைந்து செய்து முடிக்க எத்தனை நாட்கள் தேவைப்படும்?

A)24/7 நாட்கள்

B)24/11 நாட்கள்

C)1/24 நாட்கள்

D)7/24 நாட்கள்

E)விடை தெரியவில்லை

87. 2400 ச.மீ. நிலத்தை 12 வேலையாட்கள் 10 நாட்களில் உழுது முடிப்பர். 3600 ச.மீ. நிலத்தை 18 நாட்களில் உழுவதற்கு எத்தனை வேலையாட்கள் தேவை?

A)18 ஆட்கள்

B)16 ஆட்கள்

C)15 ஆட்கள்

D)10 ஆட்கள்

E)விடை தெரியவில்லை

88. 2 ஆண்கள், 7 சிறுவர்கள் சேர்ந்து ஒரு வேலையினை 14 நாட்களில் முடிப்பர். 3 ஆண்கள், 8 சிறுவர்கள் சேர்ந்து, அதே வேலையை 11 நாட்களில் முடிப்பர். எனில், அதே போல் மூன்று மடங்கு வேலையை, 8 ஆண்கள், 6 சிறுவர்கள் சேர்ந்து எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?

A)10 நாட்கள்

B)18 நாட்கள்

C)21 நாட்கள்

D)36 நாட்கள்

E)விடை தெரியவில்லை

89. A ஒரு வேலையை 10 நாட்களிலும், B அதை 15 நாட்களிலும் செய்து முடிப்பர், இருவரும் சேர்ந் அவ்வேலையைச் செய்து ரூ.1,500 -ஐ ஈட்டினால், அத்தொகையை எவ்வாறு பிரித்துக் கொள்வர்?

A)ரூ.850 மற்றும் ரூ.650

B)ரூ.900 மற்றும் 600

C)ரூ.950 மற்றும் 550

D)ரூ.1000 மற்றும் 500

E)விடை தெரியவில்லை

90. 6 ஆண்கள், 8 சிறுவர்கள் இணைந்து ஒரு வேலையைச் செய்ய, 10 நாட்கள் தேவைப்படும். மற்றும் 26 ஆண்கள், 48 சிறுவர்கள் இணைந்து அதே வேலையை 2 நாட்களில் செய்வர் எனில். 15 ஆண்கள், 20 சிறுவர்கள் சேர்ந்து அதே வேலையைச் செய்ய எத்தனை நாட்கள் ஆகும்?

A)4 நாட்கள்

B)5 நாட்கள்

C)6 நாட்கள்

D)7 நாட்கள்

E)விடை தெரியவில்லை

91. ஒரு வேலையை A யும் B யும் 6 நாட்களிலும், B யும் C யும் சேர்ந்து 12 நாட்களிலும், C யும் A யும் சேர்ந்து 4 நாட்களிலும் முடிப்பர் எனில், அவர்கள் மூவரும் சேர்ந் அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிக்க இயலும்.

A)8 நாட்கள்

B)4 நாட்கள்

C)10 நாட்கள்

D)2 நாட்கள்

E)விடை தெரியவில்லை

92. A மற்றும் B ஆகிய இருவரும் இணைந்து ஒரு வேலையை 16 நாட்களில் முடிப்பர். A தனியே அந்த வேலையை 48 நாட்களில் முடிப்பார் எனில் B தனியே அந்த வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

A)18 நாட்கள்

B)24 நாட்கள்

C)28 நாட்கள்

D)30 நாட்கள்

E)விடை தெரியவில்லை

*93. 210 ஆண்கள் நாளொன்றுக்கு 12 மணி நேரம் வேலை செய்து ஒரு வேலையை 18 நாட்களில் முடிப்பர். அதே வேலையை நாளொன்றுக்கு 14 மணி நேரம் வேலை செய்து 20 நாட்களில் முடிக்க எத்தனை ஆண்கள் தேவை?*

*A)156 ஆண்கள்*

*B)162 ஆண்கள்*

*C)172 ஆண்கள்*

*D)168 ஆண்கள்*

*E)விடை தெரியவில்லை*

*94. 5 நபர்கள் 5 வேலையை 5 நாட்களில் செய்து முடிப்பர் எனில். 50 நபர்கள் 50 வேலைகளை எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?*

*A)5 நாட்கள்*

*B)10 நாட்கள்*

*C)50 நாட்கள்*

*D)55 நாட்கள்*

*E)விடை தெரியவில்லை*

*95. A மற்றும் B ஒரு வேலையை 10 நாட்களிலும், B மற்றும் C அதே வேலையை 15 நாட்களிலும் , C மற்றும் A அதே வேலையை 18 நாட்களிலும் முடிப்பர் எனில், B தனியே அவ்வேலையை எவ்வளவு நாட்களில் முடிப்பார்?*

*A)30 நாட்கள்*

*B)20 நாட்கள்*

*C)12 நாட்கள்*

*D)18 நாட்கள்*

*E)விடை தெரியவில்லை*

96. 7 ஆட்கள் ஒரு வேலையை 52 நாட்களில் செய்து முடிக்கின்றனர். அதே வேலையை 13 ஆட்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்?

A)20 நாட்கள்

B)13 நாட்கள்

C)7 நாட்கள்

D)28 நாட்கள்

E)விடை தெரியவில்லை

97. 12 அச்சுக் கோப்பவர்கள், 5 மணி நேரத்தில் ஒரு புத்தகத்தின் 60 பக்கங்களை முடிப்பர். 20 மணி நேரத்தில், 200 பக்கங்களை முடிக்க எத்த்ன அச்சுக் கோப்பவர்கள் தேவை?

A)8

B)10

C)12

D)11

E)விடை தெரியவில்லை

98. ஒரு தண்ணீர் தொட்டியை நிரப்புவதற்கு முதற்குழாய்க்கு 12 மணி நேரம் ஆகிறது. அதே தொட்டியை நிரப்புவதற்கு இரண்டாம் குழாய்க்கு 6 மணி நேரம் ஆகிறது. மூன்றாம் குழாய்க்கு 4 மணி நேரம் ஆகிறது. மூன்று குழாய்களும் ஒரே சமயத்தில் திறந்து விடப்பட்டால் தண்ணீர் தொட்டி நிரம்புவதற்கு ஆகும் நேரம் எவ்வளவு?

A)2 மணி

B)3 மணி

C)4 மணி

D)12 மணி

E)விடை தெரியவில்லை

*99.* *7 பேர் ஒரு வேலையை தினம் 9 மணி நேரம் வேலை செய்து 30 நாட்களில் முடிக்கின்றனர். அதே வேலையை 10 பேர் தினம் 7 மணி நேரம் செய்தால், எத்தனை நாட்களில் முடிப்பர்?*

*A)30*

*B)32*

*C)28*

*D)27*

*E)விடை தெரியவில்லை*

*100.* *"Public Service Ethics – A Quest for Naitik Bharat" என்ற புத்தகத்தினை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு வெளியிட்டார். அப்புத்தகத்தின் ஆசிரியர்.*

*A)பிரபாத் குமார்*

*B)வெங்கடேஷ் திரிபாதி*

*C)கீதா செல்வன்*

*D)பிரமோத் மகாஜன்*

*E)விடை தெரியவில்லை*